முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில்
ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்
எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால
பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 18 திகதி முதல்
சோபகிருது வருடம் பங்குனி மாதம் 25 திகதி வரை
(31.03.2024 ஞாயிறு முதல் 07.04.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. எங்கு காணினும் தருமமப்பா
   எல்லாம் அரங்கனின் மகிமையப்பா
   ஓங்காரக் குடிலெனும் ஞானசபை
   உயர்வாய் படைத்து அருளும்
2. அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
   அகத்தியனும் உன் பெருமைகூறி
   வரமென இந்தியா தமிழகத்தில்
   வருங்கால பலன் குறித்து
3. குறித்துமே சோபகிருது சேல்திங்கள்
   குறைவிலா மூவாறு திகதிமேல் இருபானை திகதிவரை
   தெரிவிப்பேன் நடக்கும் வாரநிகழ்வாக
   தக்க வார ஆசிதனை உரைப்பேன்
4. உரைக்கவே அக்கினி ஆற்றல்
   உஷ்ணம் மிகுந்து பிணிசோடை
   உரைக்கவே அணுகி அகலும்
   உலகத்தில் அச்சம் தருகின்ற
5. தருகின்ற போதை பொருட்கள்
   தகாத செயல் முறைகளுமே
   வருகின்ற தலைமுறை பாதிக்கும்
   வகையில் இந்தியா தமிழகத்தில்

6. தமிழகத்தில் இடர்கள் பெருகும்
தகாத பழக்கவழக்க முறை
நேமமிலா இன்னல் யாவும்
நிலமதனில் அகன்று பாதுகாப்புற
7. பாதுகாப்புற மக்களை காக்கின்ற
பண்பான ஆளுமைகளாகவே
ஆதரவாய் மாற்றம் கண்டிட
ஆன்மீக ஞான அரசியல் களமாக
8. ஆகவே அரங்கன் வகுக்கின்ற
ஆற்றல் மிக்க வழிமுறைகளை
வகைபட மக்களெல்லாம் ஏற்று
வணங்கி வர சமூக மாற்றமாக
9. ஆகவே நிகழ்வுகள் கூடி
அறிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
மகான்கள் ஆட்சிக் காலமாக
மனிதர்கள் ஆட்சி முடிவு கண்டிட
10. கண்டிட வருங்காலம் தன்னில்
கட்டாயம் நல்லாட்சி ஞானஆட்சியுமாக
உண்டாகும் ஞானிகள் ஆசிபட
உரைத்திட்ட வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 18ம் நாள் 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 25ம் நாள் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகள் :

எங்கு பார்க்கினும் தருமம் அரங்கன் அருளால் பெருகி உள்ளதப்பா எல்லாம் ஆறுமுக அரங்கமகானின் மகிமையப்பா, உலகை தர்மவழி செலுத்தி காக்கவே ஓங்காரக்குடில் எனும் ஞானசபைதனை வல்லமையுடன் படைத்து உலக மக்களுக்கு அருளி காக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே அகத்திய மகரிஷி யானும் உமது பெருமையை உலகறியக்கூறியே இந்தியா தமிழகத்திலே வருங்கால பலன் குறித்து சோபகிருது வருடம் பங்குனி மாதம்

18ம் நாள் 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 25ம் நாள் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திலே நடக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வரும் நாட்களிலே உஷ்ணநிலை அதிகமாகி அதன் காரணமாய் நாட்டினில் நோய்கள் உண்டாகி மக்கள் துன்பம் அடைந்திட நேருமப்பா. அது படிப்படியாக விலகிடும் ஆயினும் அச்சம் கொள்ளும் வகையிலே போதை பொருள்கள் பயன்பாடு அதிகரிப்பதோடு தகாத செயல்பாடுகளும் அதிகமாகி வருங்கால தலைமுறையை பாதிக்குமப்பா.

மக்களிடையே விரைந்து பரவி வருகின்ற தகாத பழக்க வழக்கங்களும், அதனால் மக்கள் படும் துன்பங்கள் யாவும் இவ்வுலகில் இருந்து அகன்று பாதுகாப்பான சமூகமாக மாறிட வேண்டுமாயின் மக்களை ஆளும் ஆட்சியர்கள் பண்புடையவர்களாக இருந்திட வேணுமப்பா.

ஆள்பவர்கள் பண்புடையவர்களாக இருக்க வேண்டுமாயின் அரசியலானது தர்மத்தையும், ஆன்மீக வழியையும் கொண்ட ஆன்மீக அரசியல் களமாக இருக்க வேண்டும். ஆறுமுக அரங்கமகான் கூறும் ஜீவதயவுடைய தர்ம நெறிமுறைகளை மக்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டு உண்மை ஞானிகளை, ஞானத்தலைவனை வணங்கி வர வேண்டுமப்பா.

மக்கள் கடவுள் பக்தியுடன் ஞானிகளை மதித்து வணங்கி வந்தால் அவர்களது வழிபாடுகள் சமூக மாற்றமாக மாறி இந்தியா தமிழகத்திலே ஞானிகளின் ஆசி பெருகி மகான்களின் ஆட்சி காலமாக மனிதர்களின் அறிவால் செயல்படும் மனித ஆட்சி முடிவிற்கு வந்து இனிவரும் காலங்களிலே தூய அறிவுடைய ஞானம் மிக்க நல்லாட்சியாக ஞானிகள் பங்கு பெறும் ஞானஆட்சியாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—